**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 11 (LW- 12)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **அழகுராஜா** | **Father's Name** | **திருப்பதி** |
| **Village** | | **Taluk** | |
| **Calling** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 02.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது குறிச்சியில் வசித்து வந்து இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். இவ்வழக்கின் எதிரி எங்கள் லாட்ஜ்க்கு வந்தபோது நான்தான் அவர்களுக்கு ரூம் புக் செய்து கொடுத்தேன். ரூமை கொடுத்துவிட்டு எனது மாமியார் இறந்து விட்டதால் ஊருக்கு சென்று விட்டேன். நடந்த சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது மேற்கண்ட விவரத்தைத்தான் நான் சொன்னேன்.

**எதிரியின் தரப்பிலான குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலீசார் எழுதிக்கொண்டார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை எனது லாட்ஜ் முதலாளி சொல்லிக்கொடுத்து சொல்வதால்தான் எனது முதல் விசாரணையும், முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளும் முரண்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும்,

அவரது கணவருக்கும் நான் லாட்ஜில் ரூம் புக் செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 10 (LW- 11)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **சிலம்பரசன்** | **Father's Name** | கணேசன் |
| **Village** | | **Taluk** | |
| **Calling** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 02.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது பிரதாபராமபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வெளிநாட்டில் வேலை செய்து விட்டு ஊருக்கு வந்துள்ளேன். அ.சா.1ஐ தெரியாது. இவ்வழக்கின் எதிரியை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்த அன்று சாட்சிக்கு வேண்டும் என்று அழைத்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியின் வாக்குமூலம் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 12.02.2019ம் தேதி நான் குயின் பேலஸ் லாட்ஜில் வேலை செய்து வந்த சமயத்தில் பக்கத்து லாட்ஜில் உள்ள மாரிமுத்து என்பவர் தனது லாட்ஜில் தங்கியிருந்த ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்று உடனே வாருங்கள் என்று கூப்பிட்டார் என்றும், நான் அங்குஓடிச்சென்று பார்த்தபோது 30வயது மதிக்கத்தக்க ஒருவர் குளியலறையில் மல்லாந்த நிலையில் கிடந்தார் என்றும், விசாரித்தபோது அவர் நன்னிலத்தை சேர்ந்த சுதாகர் என்று தெரிந்து கொண்டதாகவும், அவர் சத்யா என்ற பெண்ணுடன் அங்கு வந்து தங்கியிருந்ததாக தெரிந்து

கொண்டதாகவும், எங்களிடம் சத்யா என்பவர் அவருக்கு லோ பிபி என்றும், அதனால் மயங்கி விழுந்து விட்டார் என்றும், முகத்தில் தண்ணீர் தெளித்துள்ளேன் என்றும் கூறியதாகவும், நானும் என்னுடன் இருந்த மாரிமுத்து மற்றும் பக்கத்து லாட்ஜில் வேலை பார்த்த ராஜா, ஐயப்பன் ஆகியோர் ஓடிவந்தார்கள் என்றும், பின்னர் சுதாகரை ஆட்டோவில் ஏற்றி அருகில் உள்ள புனித ஆரோக்கியமாதா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், பின்னர் சுதாகர் இறந்து விட்டார் என்றும், இதுசம்மந்தமாக நான் சுதாகர் தந்தைக்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றும், பின்னர் சுதாகரின் பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 9 (LW- 10)**

| Name | செல்லையன் | Father's Name | |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Calling | | Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 02.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரை நகர் திருப்பூண்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. இவ்வழக்கின் எதிரியை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியின் வாக்குமூலம் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலீசார் விசாரணையில் கடந்த 12.02.2019ம் தேதி நான் லாட்ஜில் ரூம்பாயாக வேலை செய்து வந்த சமயத்தில் அதன் மேனேஜர் அழகுராஜா சொந்த வேலையின் காரணமாக வெளியூர் சென்று விட்டார் என்றும், நான் பணியில் இருந்தேன் என்றும், அப்போது எதிரி அங்கு வந்து அண்ணன் இங்கு வாருங்கள் , எனது கணவர் லோ பிபி வந்து மயக்கமடைந்து விழுந்து விட்டார் என்று கூறினார் என்றும், நான் அங்கு சென்று பார்த்தபோது சுதாகர் மல்லாந்த நிலையில் குளியலறையில் கிடந்தார் என்றும், என்னுடன் இருந்த மாரிமுத்து மற்றும் பக்கத்து லாட்ஜில் வேலை பார்த்த சிலம்பரசன், ராஜா, ஐயப்பன் ஆகியோர் ஓடிவந்தார்கள் என்றும், பின்னர் சுதாகரை ஆட்டோவில் ஏற்றி அருகில் உள்ள புனித ஆரோக்கியமாதா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், இதுதொடர்பாக பெண்உதவி ஆய்வாளர் சூர்யா விசாரித்தார்கள் என்றும், பின்னர்

சுதாகரின் தகப்பனார் லாட்ஜிற்கு வந்து ரூமை திறந்து விடுங்கள் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தங்கம் என்கிற வீராச்சாமி ரூமை திறந்து விட்டுள்ளார் என்றும் இதுதொடர்பாக மாரிமுத்து மறுநாள் காலையில் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் என்றும், மேற்படி புகார் சம்மந்தமாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**